# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

## S.C.No.217/2022

Deposition of witness for Prosecution – PW8

| | | | |
|---|---|---|---|
| Name | : ராமசந்திரன் | Caste | : |
| S/o. | : சித்தையன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed on 19.09.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused present.

முதல் விசாரணை :

நான் சங்ககிரி வட்டம், அரசிராமணி கிராமம், செட்டிப்பட்டி வன்னியர் தெருவில் குடியிருக்கிறேன். நான் மீன் பிடிக்கும் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். அவர் பெயர் போர்மன்னன். வழக்கில் இறந்துபோன ஆனந்தனை எனக்குத் தெரியும்.

சுமார் 2,3 வருடங்களுக்கு முன்னர் ஆனந்தன் கொலையான போது நான் வீட்டில் உறங்கிக்கொண்டிருந்தேன். இரவு சுமார் 2.00 மணிக்கு எனக்கு போன் மூலம் பூசாரி ஆனந்தனை வெட்டிவிட்டார்கள்,

நீ எங்கிருக்கிறாய் வா என்று கூப்பிட்டார்கள். நான் போய் பார்த்தேன். சம்பவ இடத்தில் ஆனந்தன் வெட்டுப்பட்டு கிடந்தார். அவரை போர்மன்னன் வெட்டி விட்டதாக சொன்னார்கள். விறகு உடைக்கும் வண்டி போட்ட தகராறில் ஏற்பட்ட முன்விரோதம் காரணமாக எதிரி போர்மன்னன், ஆனந்தனை வெட்டிவிட்டதாக சொன்னார்கள். நாங்கள் 10 பேர் போர்மன்னனிடம் ரூ.2,00,000/- சீட்டு போட்டோம். 6 ஏலம் நடந்துவிட்டது. 4 ஏலம் நடக்கவில்லை. நான், பூசாரி ஆனந்தன், மணி, கார்த்தி அனைவரும் போர்மன்னனிடம் சீட்டை நடத்துங்கள் அல்லது பணத்தை கொடுங்கள் என்று கேட்டோம். அதற்கு எதிரி தகாத வார்த்தையால் திட்டினார். அவர் பணமும் தரவில்லை. பணம் தர முடியாது, என்ன பண்ணமுடியுமா பண்ணிக்கொள்ளுங்கள் என்று கூறிவிட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

பூசாரி ஆனந்தன் எனக்கு தாய்மாமன் என்றால் சரி. ஆனந்தகுமார் என்பவர் எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார். சம்பவ இடத்திற்கு நான் சென்றபோது எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் 50 பேர் இருந்தார்கள், 2,3 போலிசார் இருந்தார்கள். ஒரு வாரம் கழித்து நான் காவல்நிலையம் சென்றேன். அப்போது போலிசார் என்னை விசாரித்தார்கள். போலிஸ் விசாரணையில் நாங்கள் சீட்டு போட்ட விவரத்தை கூறினேன் என்றால் சரி. எதிரி சீட்டு எதுவும் நடத்தவில்லை என்றும் பூசாரி ஆனந்தன் என்னுடைய மாமா என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சம்பவத்தன்று இரவே எதிரியை காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றார்களா என்றால் அவ்வாறு சொல்லிக்கொண்டார்கள், எனக்குத் தெரியாது. காவல்நிலையத்தில் நான் போர்மன்னனை பார்த்தேனா என்றால் இல்லை. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/– S.Sumathy,
Principal Sessions Judge, Salem.